தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 11.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.CP 904/F/2024

திரு.ஆர்.சண்முகசுந்தரம் .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (மதுரை) லிமிட்., .. பொது அதிகார அமைப்பு
பைபாஸ் ரோடு, மதுரை-625010.

ஆணை-II

இவ்வழக்கின் மீதான விசாரணை 07.10.2026 அன்று, நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திருமதி.T.சித்ராதேவி, உதவி மேலாளர் (நிர்வாகம்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட், திண்டுக்கல் அவர்கள் 11.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.2000/- வழங்கப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் அதனைப்பெற்று ஏற்பளிப்பு செய்ததாகவும் கூறி அதற்கான ஆதாரங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திருமதி.G.கலாதேவி (மவமே), உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிட்., கூட்டாண்மை அலுவலகம், மதுரை அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் உறுதி செய்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து கீழ்காணும் உத்தரவினை இவ்வாணையம் பிறப்பிக்கிறது.

- **" மனுதாரர் தாக்கல் செய்த சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு உரிய காலத்தில் தகவல் வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திருமதி.G.கலாதேவி, உதவி மேலாளர் (ஓய்வு), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிட்., கூட்டாண்மை அலுவலகம், மதுரை அவர்களுக்கு சட்டப்பிரிவு 20(1)ன் கீழ் அபராதமாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) விதித்து இவ்வாணையம் ஆணையிடுகிறது. அதனை அரசு கணக்குத்தலைப்பில் செலுத்தி அதற்கான ஆதாரத்தினை அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் இவ்வாணையத்தில் 02.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது."**

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்
(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண்.CP 904/F/2024</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு:-</u>
பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (மதுரை) லிமிட்.,
பைபாஸ் ரோடு, மதுரை-625010.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (மதுரை) லிமிட்.,
பைபாஸ் ரோடு, மதுரை-625010.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

<u>புகார்தாரர்:-</u>

திரு.ஆர்.சண்முகசுந்தரம்,
வார்டு 21, கடை வீதி,
லோயர் கேம்ப்,
பெரியார் புராஜக்ட் (அஞ்சல்),
உத்தமபாளையம் வட்டம்,
தேனி மாவட்டம்-625525.

Copy to file: KR/PA